முக்கியத்துவம் இல்லாமல் போய்விடும். உங்களுடைய அபிப்பிராயத்தை 82-வது விதியின்படி கொடுக்காததற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. (கனம் ஸ்ரீ கே. காமராஜ்: காரணந்தான் பதிலிலே கொடுக்கப்பட்டிருக்கிறதே!).

MR. SPEAKER: There is no point of order.

SRI M. KALYANASUNDARAM: **On a point of information,** கனம் சபாநாயகர் அவர்களே, மதுரை நகரத்திலிருந்தும் கோயம்புத்தூர் நகரத்திலிருந்தும் கவலை தரும் செய்திகள் கிடைத்திருக்கின்றன. இயற்கை கோளாறு காரணமாகப் புயல் அடித்து சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ற செய்தி சபையில் இருக்கும் அங்கத்தினர்களுக்குக் கவலை தரக்கூடியதாக இருக்கும். இந்தச் சபை கூடியிருக்கும் காரணத்தால் எதிர்பாராத நிகழ்ச்சிகள் ஏற்படும்போது அவற்றின் தன்மை என்னவென்று இந்தச் சபைக்கு அறிக்கை சமர்ப்பிப்பது அவசியம். இதுபற்றித் துரிதமாக நடவடிக்கை எடுத்து அங்குள்ள உண்மை நிலை என்ன என்பதுபற்றி 7-ம் தேதியன்று ஒரு அறிக்கையைச் சமர்ப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம சபாநாயகர் அவர்களே, கோவையிலும், மதுரையிலும் புயல் அடித்ததன் காரணமாக ஏற்பட்ட சேதங்கள் பற்றி உடனடியாகவும், அவசரமாகவும் தகவல்கள் பெற்று கூடியவரையில் என்னென்ன தகவல்கள் கிடைக்கின்றனவோ அவற்றை நாளை மறுதினம், 7-ந் தேதியன்று கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்கலாம் என்று நினைக்கிறேன்.

V.—ASSOCIATION OF COUNCIL MEMBERS WITH THE COMMITTEE ON ESTIMATES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, I move—

"That this House recommends to the Legislative Council that they do nominate five members of the Council to associate with the Committee on Estimates of this House for the year 1962–63 and communicate to this House the names of the Members so nominated."

SRI M. KALYANASUNDARAM: Sir, I move—

'In line 2 of the resolution *for* the word 'five' *substitute* the word 'three'.

SRI T. L. SASIVARNA THEVAR: Sir, I second the amendment.

MR. SPEAKER: The motion and the amendment are before the House for discussion.

[5th May 1962.

Sri M. KALYANASUNDARAM : Sir, I want to say a few words. எஸ்டிமேட்ஸ் கமிட்டியானது மிகவும் முக்கியமான ஒரு கமிட்டி. கடந்த பத்தாண்டு நடவடிக்கைகளை எடுத்துப் பார்த்தால் நம்முடைய சட்டசபை எஸ்டிமேட்ஸ் கமிட்டி பாராட்டக்கூடிய பல அறிக்கைகளை, ஏறத்தாழ 22 அறிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். லோக்சபை எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் ராஜ்ய சபாவில் இருக்கும் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்வதே இல்லை. எஸ்டிமேட்ஸ் கமிட்டி வேறு, பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி வேறு. கவுன்சிலில் இருந்து அங்கத்தினர்களைச் சேர்ப்பதை ஆட்சேபிக்க வேண்டியிருக்கிறதே என்பது வருத்தமாகத்தான் இருக்கிறது. கவுன்சில் அங்கத்தினர்கள் சேர்ந்து ஒத்துழைப்புக் கொடுப்பதைவிட நம்முடைய லட்சியங்கள், நோக்கங்களுக்குக் குந்தகமான கருத்து அங்கிருந்து பிறப்பதைக் குறைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன்தான் நான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். நம்முடைய கமிட்டிகள் திறமையாக வேலை செய்யவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, கமிட்டியில் போடக்கூடிய அங்கத்தினர்கள் எப்படி இருக்க வேண்டுமென்றால், ஒவ்வொரு கூட்டத்திற்கும் தவறாமல்—எதிர்பாராத நிகழ்ச்சிகள் ஏற்பட்டாலொழிய—வந்து நடவடிக்கைகளிலே கலந்து கொள்ளக்கூடியவர்களாக இருக்கவேண்டும். நான், கவுன்சில் அங்கத்தினர்களை எடுத்துக் கொள்ளவே கூடாது என்று கூறாமல் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டுமென்று கூறியிருப்பது நியாயமானது என்று கருதுகிறேன். இதை கனம் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று கருதுகிறேன்.

எஸ்டிமேட்ஸ் கமிட்டியானது இவ்வளவு அறிக்கைகள் சமர்ப்பித்தும்கூட, கமிட்டி சொல்லி இருக்கக்கூடிய யோசனைகள்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றது என்று பார்த்தால் மிகவும் குறைவாக இருக்கிறது. அரசாங்க இலாக்காக்கள் எஸ்டிமேட் கமிட்டி ரிப்போர்ட்மீது அக்கறை செலுத்தி, பரிசிலனை செய்து தக்க பதிலை ஒரு வருஷ காலத்திற்குள்ளாகவாவது கொடுக்கவேண்டுமென்று இலாக்காக்களை வற்புறுத்த வேண்டும். குறிப்பாக, நிதியமைச்சர் அவர்கள் இதுபற்றி முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய தீர்மானமானது, எஸ்டிமேட்ஸ் கமிட்டியோடு கவுன்சிலில் இருந்து ஐந்து உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வது, அதாவது "Associate" செய்துகொள்வது என்பதாகும். இந்தமாதிரி வழக்கமாக நடைபெற்று வருகிறது. ஐந்தை மூன்றாக்கவேண்டுமென்று கனம் அங்கத்தினர் அவர்கள் திருத்தம் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தக் கமிட்டிக்குப் 14 பேர் இந்த மன்றத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, கவுன்சிலில் இருந்து 5 பேரைச் சேர்த்துக் கொள்வது என்பதை 3 பேராகக் குறைப்பது சரியல்ல. ஐந்து

5th May 1962] [Sri M. Bhaktavatsalam]

பேரைச் சேர்த்துக் கொள்வதால் ஒன்றும் கெட்டுப்போகாது. அந்த மன்றத்தைச் சேர்ந்தவர்களும் யோசனைகளைக் கூறுவது பலன் தரத்தக்கதாகவே இருக்கிறது. இந்தத் திருத்தத்தை வற்புறுத்த வேண்டாமென்றும், வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் கனம் அங்கத்தினரைக் கேட்டுக் கொள்கிறேன். மற்றப்படி அவர் பேசியது இந்தத் தீர்மானத்திற்கு உகந்தது அல்ல. எஸ்டிமேட்ஸ் கமிட்டியின் சிபாரிசுகள் மீது சீக்கிரத்தில் நடவடிக்கைகள் எடுப்பதுபற்றியெல்லாம் அப்போதைக்கப்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் அதுபற்றி கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் அதுபற்றி கவனம் செலுத்தப்படும் என்று கூறி, இந்தத் திருத்தத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Sri M. KALYANASUNDARAM: நிதியமைச்சர் அவர்கள் மெஜாரிட்டியை உபயோகப்படுத்தி எனது அமென்ட்மென்டைத் தோற்கடிப்பதாகயிருந்தால் நான் வற்புறுத்தவில்லை. அதை ஏற்றுக் கொள்வார்கள் என நினைக்கிறேன். 9-30 a.m.

The amendment was, by leave, withdrawn.

Mr. SPEAKER: The question is—

'That this House recommends to the Legislative Council that they do nominate five members of the Council to associate with the Committee on Estimates of this House for the year 1962–63 and communicate to this House the names of the Members so nominated.

The motion was put and carried.

VI.—ASSOCIATION OF COUNCIL MEMBERS WITH THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, I move—

'That this House recommends to the Legislative Council that they do nominate five members of the Council to associate with the Committee on Estimates of this House for the year 1962–63 and communicate to this House the names of the Members so communicated.'

Mr. SPEAKER: The motion is before the House for discussion.

Sri M. KALYANASUNDARAM: இதற்கும் ஒரு திருத்தம் கொடுத்திருந்தேன். முன்பு கொடுத்த திருத்தத்தின் கதிதான் இதற்கும் ஏற்படுமென்று நினைக்கிறேன். போதுமான ஓட்டுகள் இல்லாத காரணத்தினாலும், பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் கௌன்ஸில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்வது பல ராஜ்யங்களிலுள்ள சம்பிரதாயமாகயிருப்பதாலும் இதைப்பற்றி ஆட்சேபிப்பது சரியாகயிருக்காது என்று நான் ஆட்சேபிக்கவில்லை. ஒரு யோசனை கூற விரும்புகிறேன். ஐந்தாண்டுகள் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் வேலை செய்த அனுபவத்தை வைத்துப்